# Anode Fabricators Pvt Ltd

Innovation In Inert Metals

MMO, Platinized Ti & Nb Anodes

Ti Nb Ir Ta Ru Pt

#48, Noothanchery, Madambakkam, Chennai – 73, India. Ph: 0091 44 22781149/1150 Fax: 22781362 Email: info@tianode.com Web: www.tianode.com


## Inter-Organizational News Letter - October 05

### MAN OF THE MONTH



MR. K. KANTHAN – STORES
Sincerity

### FORECASTING 05-06

| | |
|---|---|
| Turnover | : 125% ↑ |
| Employment | : 25% ↑ |
| Profitability | : 100% ↑ |
| Modernization | : in coating Plant → |
| Rejection growth | : 100% ↓ |

### TESTIMONIALS

▶ **Customers:**

| | |
|---|---|
| Up to July 05 | : 145 Nos |
| Up to August 05 | : 148 Nos |

▶ **Performance: Aug 05**

| | |
|---|---|
| Turnover growth | : 37.13% |
| Employment growth: | 03.40% ↓ |
| 100% Attendance | : 18.97% |

### KEY PERSONS

| | |
|---|---|
| Mr. M.P.V. Jaykumar | - CEO. |
| Mr. RM. Ravi Chandran | - Marketing. |
| Mr. T. Ramesh | - Purchase. |
| Mr. T. Amaladhas | - Stores & Plating. |
| Mr. N. Murugan | - Production. |
| Mr. C. Sounder Suresh | - Out Sourcing. |
| Mr. Vijaya Sai | -Operation&Planning |

### MANAGEMENT

| | |
|---|---|
| Ms. P.E. Nancy | – Director |
| Mrs. J. Vanajambika | – Director |

### ACHIEVEMENT




| | | |
|---|---|---|
| Goal (05-06) | 125% | |
| Achivement 05-06 | 37.13% | -4.54% |
| Achivement 04-05 | 100% | |

## உண்மை

ஒரு சின்ன சம்பவம், அந்த (ஒரு) சிறுவன் வீட்டுத்தோட்டத்தைச் சுத்தம் செய்கிறேன் என்று அடர்ந்து கிடந்த புதர்களையும், செடிகளையும் வெட்டி சாய்த்துக்கொண்டிருந்தான். அப்படி வெட்டியபோது அவனுடைய தந்தை ஆசையாய் வளர்த்துக்கொண்டிருந்த 'செர்ரி' செடியும் வெட்டுபட்டுவிட்டது. குடும்பத்தினர் எல்லோருக்கும் பயம். ஏனென்றால் அவனது தந்தை கோபக்காரர். அவர் ஆசையாய் வளர்த்த செடி இல்லையென்றால்... என்ன செய்வது என்று எல்லோரும் பயந்து கொண்டிருந்தார்கள்.

மறுநாள் "யார் என் செடியை வெட்டியது?" என்று தோட்டத்துக்குச் சென்று வந்த தந்தைக் கோபமாய் கேட்டார்.

"நான்தாம்பா வெட்டினேன். தோட்டத்தை சுத்தம் செய்யும் போது தவறுதலாய் வெட்டிவிட்டேன்" என்றான்.

அடுத்து அடிதான் விழப்போகிறது என்று காத்திருந்தவர்களுக்கு இன்ப அதிர்ச்சி. அவர் ஒன்றும் செய்யவில்லை. 'இனிமேல் கவனமாய் இரு' என்று மட்டும் சொன்னார். ஏன் அடிக்கவில்லை? அதற்கு தந்தை சொன்ன பதில், "**தைரியமாய் உண்மையைச் சொல்பவனைத் தண்டித்தால் அவன் வாழ்க்கை பொய்யாகிவிடும்.** அவனால் உண்மையாக, வீரமாக வாழ முடியாது".

அன்று உண்மை பேசிய சிறுவன் பிற்காலத்தில் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியாக உயர்ந்த ஜார்ஜ் வாஷிங்டன் அவர்கள்.

**Positive Point**
**உண்மை எப்போதும் உயர்வு தரும்.**

## முயற்சி

ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழக ஆடிட்டோரியம் மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் நிறைந்திருந்தது. இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலின் பேச்சைக்கேட்கத்தான் அத்தனைக் கூட்டம். அவர் அப்பல்கலைக்கழக முன்னாள் மாணவர். மேடையேறினார் சர்ச்சில். என்ன பேசப்போகிறார் என்று எல்லோரும் ஆவலாய்க் காத்திருக்க, மைக்கைப் பிடித்தார் சர்ச்சில். மூன்றே வார்த்தைகளை உரக்கச் சொன்னார். "முயற்சியை எப்போதும் கைவிடாதீர்கள்". அடுத்து என்ன சொல்லப் போகிறார் என்று அனைவரும் காத்திருக்க, சர்ச்சில் மீண்டும் அதே மூன்று வார்த்தைகளை உரக்கச் சொன்னார். அத்துடன் அவர் பேச்சு முடிந்தது.

இந்த மூன்று வார்த்தைகளுக்கு ஒரு ஃப்ளாஷ்பேக் இருக்கிறது. அந்தப் பல்கலைக்கழகப் பள்ளியில் சர்ச்சில் எட்டாம் வகுப்பு படிக்கும் போது மூன்று முறை தோல்வியடைந்துவிட்டார். எட்டாம் வகுப்பை முடிக்க அவருக்கு மூன்று வருடங்கள் ஆகின.

... 2

## FUNCTIONAL WISHES



**Gandhi Jeyanthi – October 02**
**Ayudha Pooja – October 11**
**Vijaya Dasmi – October 12**

Best Wishes by Staff Members.

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. United Bank of India |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : 1] Lr. M.K. Govindan. |
| | 2] Lr. V. Benedict Vincent. |
| Software | : M/s. IndSys Technologies |

## கவித் தென்றல்

**பஞ்ச பூதம்**

சுனாமியால்(நீரால்) இழந்தோம் – நம்
கடலோர மக்களை தமிழகத்தில்
நெருப்பால் இழந்தோம் – நம்
இளம்பிஞ்சுகளை குடந்தையில்
வான் மழையால் இழந்தோம் – நம்
உடமைகளையும் மக்களையும் ஆந்திராவில்
நிலநடுக்கத்தால் இழந்தோம் – நம்
உற்றார் உறவினரை குஜராத்தில்
வாயுவால் இழந்தோம் – நம்
இந்தியதேசத்தின் செல்வங்களை போபாலில்
இதன் பெயர்தான் பஞ்சபூதமா...?

Mr. A. Joseph Raj
Stores

## இன்னும் கொஞ்சம்

பரிவாய் பேசுங்கள்,
துணிவாய் பேசுங்கள்,
இயல்பாய் பேசுங்கள்,
உண்மை பேசுங்கள்.

## BIRTH DAY WISHES

| | | |
|---|---|---|
| Miss. A. Sankari | - Si/o. A. Mohan | - Oct 01 |
| Miss. A. Ambika | - Si/o. A. Nirmala | - Oct 10 |
| Mrs. R. Jayanthi | - Receptionist | - Oct 10 |
| Mr. D. Jothi | - Security Officer | - Oct 23 |

**எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான்**
**மண்ணில் பிறக்கையிலே!**
**அவர் நல்லவராவதும் தீயவராவதும்**
**அன்னை வளர்ப்பினிலே!!**

**Best Wishes by, Staff Members.**

**Positive Point**
முயற்சியை எப்போதும்
கைவிடாதீர்கள்.

சர்ச்சில் மட்டும் அன்று மனம் வெறுத்து மீண்டும் மீண்டும் முயலாமல் இருந்திருந்தாரானால்...? அதன் எதிரொலிதான் அந்த மூன்று வார்த்தைகள்.

## பொன் மொழிகள்

தண்ணீரைக் கூடச் சல்லடையில் அள்ளலாம்
அது பனிக்கட்டியாகும் வரை பொறுத்திருந்தால்!

## ஏறு! ஏறு! ஏறு!

ஏறிக்கொண்டிருக்கும் போதே...
சறுக்கத்தான் செய்யும்!
வாழ்க்கையென்றால்
அப்படித்தான்!
அதற்காக அலுத்துப்போய்
அமர்ந்துவிடாதே!
ஏறு! ஏறு! ஏறு!
ஒருநாள் நீ மேலே இருப்பாய்!

**தன்னம்பிக்கை வரிகள்**
சுடப்பட்டிருக்கமாட்டாய் நீ
தங்கமாக இல்லாவிட்டால்
சுடுதாங்கு; நகையாவாய்.

தொகுத்தளித்தவர்
Mr. P. Gopalakrishnan and Family
Production

********

## நம்பிக்கை

முடியும் என நினை வெற்றி நம் அருகில்
முடியாதென நினை தோல்வியில் நாம்
அசையாத நம்பிக்கையை அடிமனதில் குடிவை
ஆலமரத்தையும் அசைத்து விடலாம்
துணிந்து நடைபோடுவோம், வெற்றி நம்மை கொஞ்ச
தோல்வி கண்டு அஞ்ச, தினமும் துணிவுடனே.

Mr. M. Suyambu

********

## வாசகர் குரல்

இது போன்ற சுற்றறிக்கைகள் நீங்கள் நடத்துவது மிகவும் பயனுள்ளதாக உள்ளது. வரவேற்கத்தக்கது. எங்கள் குடும்பத்தினரின் பாராட்டுகள்.

Mr. P. Gopalakrishnan and Family

எங்கள் குழந்தைகளுக்கு ஒட்டு மொத்த நிறுவன ஊழியர்களும் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்திருப்பது மிகவும் மனநிறைவாக இருந்தது.

நிறுவன Staff Day meeting – ல்
Mrs. Glory Amaladhas



**சிறுகதைகள், துணுக்குகள்**
**கவிதைகள், கட்டுரைகள்**
**பணியாளர்கள் மற்றும் குடும்ப**
**உறுப்பினர்களிடமிருந்து**
**வரவேற்கப்படுகிறது.**
**– Editor**